Registered as a Newspaper

A/L 87
நடைபெறுகிறது
Physical Chemistry
ஆசிரியர்:
திரு. தில்லைநாதன்
New Master
INSTITUTE
B. M.C. Lane,
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1/-

A/L 87
Physics
Current Electricity
ஆரம்பம்: 01-02-1987
ஆசிரியர்:
திரு. வர்ணம்
New Master
Institute
B.M.C. Lane JAFF NA.

கடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு தை மீ 20 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 3 (02-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுடர் 57

## இனப் பிரச்சினைத் தீர்வுக்கான

# இலங்கை அரசின் பதில் கிழக்குத் தாக்குதல் தானா?

## இந்தியாவுக்கு ஏமாற்றம் என்று சிதம்பரம் சீற்றம்

கோயமுத்தூர், பெப் 1

இனப்பிரச்சினை குறித்து மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க, மூன்று தினங்களில் இலங்கை அரசின் ஆக்கபூர்வமான பதிலை பெற்றுத் தருவதாக தூதுவர் பெர்னுட் திலகரத்தின எம்மிடம் கூறியிருந்தார்

ஆனால் அவர் அப்படிக் கூறுயதற்கு அடுத்த நாளில் இருந்து மூன்று தினங்கள் இலங்கையின் கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இராணுவ நடவடிக்கைதான் இலங்கையின் ஆக்கபூர்வமான பதிலாகக் கொள்ளப்பட வேண்டுமானால் அது இந்தியாவுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளது'

இவ்வாறு சீற்றம் கொண்டார் இந்திய மத்திய இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம்.

கோயமுத்தூரில் நடந்த விழா ஒன்றில் கலந்துகொள்ள வந்த போது திரு. சிதம்பரம் செய்தியாளர் மத்தியில் பேசினர்.

அவர் அவ்வேளை செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்ப் போராளிகள் மீது எடுக்கப்பட்டு வரும் புதிய இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசு உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினைப் பேச்சுக்களுக்கான சுமுகமான தீர்வைக் காணும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமானால்



சிதம்பரம்

இலங்கை அரசு தற்போது எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும்.

### தூதுவர் சொன்னதும் நடந்ததும்

கடந்த மாதம் 27இல் இலங்கைத் தூதுவர் திரு. பெர்னுட் திலகரத்தின, புதுடில்லியில் என்னையும் இணை அமைச்சர் நட்வர் சிங்கையும் சந்தித்து மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றிப் பேசினர்.

இது சம்பந்தமாக (4-ம் பக்கம் பார்க்க)



சொன்னது ஒண்டு நடந்தது ஒண்டு என்டதைச் சும்மா சொல்லி என்ன, உலகத்துக்கு விஷயத்தை அம்பலப் படுத்த வேணுமே. அப்ப தானே இவையின்ரை பீத்தல் தெரியும். . . !

### புலிகளுடன் சிதம்பரம் பேச்சு

சென்னை, பெப் 1

இணை அமைச்சர் ப. சிதம்பரம் கடந்த சனிக்கிழமை இரவு தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

திரு. சிதம்பரத்தின் இல்லத்தில் நடந்த இப் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் அன்ரன் பாலசிங்கம், திலகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-எ)

### நாடு திரும்பாத 30 பேர்

யாழ்ப்பாணம், பெப் 2

யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து உயர்கல்விக்காக வெளிநாடு சென்ற முப்பது அறிஞர்கள், பேராசிரியர்கள் மீண்டும் நாடு திரும்பவில்லை.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இத்தகவலை நேற்று நடைபெற்ற 'ஆய்வு' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கூறினர். (இ-5)

## பஸ் மீது துப்பாக்கிச்சூடு

யாழ்ப்பாணம், பெப் 2

கிளிநொச்சி இராணுவ முகாம் பக்க பாதையூடாகச் சென்ற வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

பஸ் சேதமடைந்ததாயினும் பயணிகள் எவரும் காயம் அடையவில்லை.

நேற்று இச் சம்பவம் நடைபெற்றது.

பருத்தித்துறையில் இருந்து வவுனியா சென்ற பஸ் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் பஸ் தொடர்ந்து பயணத்தை மேற்கொண்டது.

இதனையடுத்து ஏனைய பஸ்கள் முல்லைத்தீவுப் பாதையூடாகவே போக்குவரத்தை நடத்தின.

### சிப்பாய் பலி

யாழ்ப்பாணம் பெப் 2

கிளிநொச்சியில் இராணுவ முகாம் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானர்.

நேற்றுப் பகல் இச்சம்பவம் நடந்தது

இச் சம்பவத்தை அடுத்து கிளிநொச்சி முகாமில்இருந்த சிப்பாய்கள் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். (இ 10)

### மேலும் 4 கப்பல்கள்

சென்னை, பெப்.1

இந்தியக் கடலோரப் பாதுகாப்புக்காக மேலும் நான்கு கப்பல்களை வாங்க கடலோரக் காவல்படை முடிவு செய்துள்ளது. (உ-எ)

### ஆனையிறவில் சிப்பாய்கள் கெடுபிடி தளர்வு

யாழ்ப்பாணம், பெப் 2

ஆனையிறவு இராணுவ முகாமில் சிப்பாய்களின் சோதனைகளும் கெடுபிடிகளும் நேற்று மிகவும் குறைந்து காணப்பட்டன.

நேற்று முகாம் பாதையூடாக போக்குவரத்து நடத்திய அனேக வாகனங்கள் சோதனையிடப் படவில்லை-

பலபயணிகளின் அடையாள கார்ட்டுகள் கூட பார்வையிடப்படவில்லை (இ-10)

### மருத்தித்துறை: பலர்இடம்பெயர்வு

உடுப்பிட்டி, பெப். 2

பருத்தித் துறையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற மும்முனைத் தாக்குதல்களை அடுத்து வியாபாரிமூலை, இன்பருட்டி, பருத்தித்துறை, வி. எம், ரோட் வண்ணாந்துறை போன்ற இடங்களில் வசித்துவந்த பலர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் தம்பசிட்டி பாடசாலை, நெல்லியடி மெ. மி. பாடசாலை தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தஞ்சமடைந்துள்ளர்.

வேறுசிலர் வரணி துன்னலை போன்ற இடங்களுக்கும் சென்றுள்ளனர். (இ-157)

### எம். எல். ஏக்கள் பதவி நீக்கம் சட்டரீதியானதா?

சென்னை, பெப் 1

பத்து தி. மு. க. எம். எல். ஏக்களை பதவி நீக்கம் செய்த தமிழ்நாடு சட்டசபைத் தீர்மானம் சட்டரீதியானதா?

இம்மாதம் 17 ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து நான்கு தினங்கள் சென்னை மேல் நீதிமன்றம் இது குறித்து விசாரணை நடத்த இருக்கின்றது.

பதவி நீக்கல் செய்யப்பட்ட பத்து எம் எல் ஏக்களும் தாம் பதவிநீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்குகல் செய்த மனுவைத் தொடர்ந்தே சென்னை மேல் நீதிமன்றம் இந்த விசாரணையை நடத்த உள்ளது.

பிரதம நீதியரசர் எம். என். சந்தர்க்கர், நீதியரசர் திரு. எம். சிறினிவாசன் ஆகியோர் விசாரணையை நடத்துவர். (இ-எ)

# எனது இடத்தில்வேறுஎவராவது இருந்திருந்தால் கதையேவேறு

## இந்திய சஞ்சிகைக்கு ஜே. ஆர். பேட்டி

புதுடில்லி பெப், 1

எனது பதவியில் இன்று வேறு எவராவது இருந்திருந்தால் கதையே வேளுருக இருந்திருக்கும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன, இந்திய வார சஞ்சிகையான "இல்லஸ்ரேட்டட் வீக்லி ஒப் இன்டியா" வுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிருர்.

இச்சஞ்சிகைக்காக திரு பிரானே குப்தே என்ற பத்திரிகையாளர் திரு ஜெவர்த்தனவை நான்கு மணித்தியாலங்களுக்கு அதிகமாக பேட்டி கண்டார்.

அப்போது கேட்கப்பட்ட சில கேள்விகளும் அதற்கான ஜனாதிபதியின் பதில்களும் வருமாறு;

கேள்வி: தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை அதிகரிக்கத் திட்டமிட்டு வருகிறீர்கள் என்று கூறப்படுகிறது. இது உண்மையா?

ஜே ஆர்: இது முழுக்க உண்மை. உங்கள் நாட்டில் ஒரு பகுதியை வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் (brigands) பிடித்து வைத்து இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

கேள்வி: தமிழ்ப் பிரிவினைவாதிகள் சொந்தத் தாயகம் வேண்டும் என்று கோருகிருர்கள். உங்கள் பதில் என்ன?

ஜே ஆர்: நான் அவர்களுக்குச் சொல்கிறேன்- முழுத் தீவுமே உங்கள் தாயகம் தான். இதற்கும் அதிகமாக எதை நான் கொடுக்க முடியும்?

கேள்வி: தமிழர் மீது அடக்குமுறையை இலங்கை அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது என்று வெளிநாட்டு அவதானிகள் குற்றஞ் சாட்டுகின்றனர். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ஜே. ஆர்: இது இனப் பிரச்சினை; சிறுபான்மை இனத்தை அடக்குமுறை செய்கிறோம் என்று தான் வெளி உலகம் சொல்கிறது அப்படி இலேசாகச் சொல்லிவிட முடியாது.

சட்டம் - ஒழுங்கு, மற்றும் ஜனநாயக விதாபனங்கள் இயங்க முடியாத பகுதியில் அவற்றை மீண்டும் இயங்கச் செய்வதில் தான் நாம் (4-ம் பக்கம் பார்க்க)

# தாக்குதல் நடவடிக்கை கிழக்கில் பூர்த்தியாம்

## அடுத்தது வடக்கு என்று தகவல்

கொழும்பு, பெப். 2

கிழக்கில் தாக்குதல் முற்றுப்பெற்று விட்டது வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப் பாதுகாப்புப் படையினர் திட்டமிட்டு வருகின்றனர்.

அதிகாரபூர்வமான வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பு அரசு ஞாயிறு ஆங்கிலப் பத்திரிகை 'சண்டே ஒப்சேவர்' நேற்று செய்தி வெளியிட்டது

''கிழக்கில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை முற்றுப் பெற்றது! வடக்கில் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கத் திட்டம்'' — என்ற தலைப்புடன் இச் செய்தி முதல் பக்கத் தலைப்புச் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டது.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

வடக்கில் எடுக்கப்படவிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக துருப்புக்களும் ஆயுதங்களும் கப்பல்களிலும் விமானங்களிலும் அனுப்பப்படும்.

துருப்புக்களையும் ஆயுதங்களையும் வீதி வழியாக அனுப்பமுடியாது. வீதிகளில் கண்ணி வெடிகள் வைக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம்.

வடபகுதியில் தீவிரவாதிகள் யார்? பொதுமக்கள் யார் என்று அடையாளம் காணுவதே பெரிய பிரச்சினையாக உள்ளது.

இப் பாரிய தாக்குத (4ம் பக்கம் பார்க்க)

### ★ பி பி சி செய்தியாளர் மீது கண்டனம்

கொழும்பு, பெப் 2

கொக்கட்டிச்சோலையில் ஆயுதப்படையினரின் தாக்குதலுக்கு 200க்கும் அதிகமான தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று செய்தி வெளியிட்டதற்காக பி பி.சி கொழும்பு செய்தியாளர் திரு ஜோன் ரெற்றியை இலங்கை அரசு கண்டித்துள்ளது.

விசேட பத்திரிகை அறிக்கை ஒன்றை இதற்கென அரசின் வெகுஜன (4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

02-02-1987

திங்கட்கிழமை

சுபநேரம்: 12. 36 முதல் 2 .06வரை

ராகுகாலம்: 8 06 முதல் 9 36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சதுர்த்தி விரதம்

### கொக்கட்டிச்சோலையில்

## 10 ஆயிரம் பேருக்கு உணவு, மருந்து வகைகள்

மட்டக்களப்பு, பெப், 2

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலைப் பகுதிக் காடுகளில் தஞ்சமடைந்திருந்த பத்தாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்களுக்கு நேற்று அவசரமாக உணவுப் பொருள்களும் மருந்து வகைகளும் அனுப்பிவைக்கப்பட்டன.

ஆயுதப் படையினரின் மூன்று நாள் தாக்குதலில் 12,000 க்கும் அதிகமான தமிழ் மக்கள் காடுகளில் தஞ்சமடைந்திருந்தனர்,

நான்கு நாட்களாக உணவு எதுவுமின்றி இருந்த இவர்களுக்கு நேற்றுத் தொடக்கம் 2 வார காலத்துக்கு உலர்ந்த உணவுப் பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

படையினரின் துப்பாக்கிப் பிரயோகங்கள், விமானத் தாக்குதல்களில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மருந்துவகைகளும் நேற்று அனுப்பிவைக்கப்பட்டன.

டாக்டர்கள் குழுக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. (இ-எ)

### சுற்றிவளைக்க முயன்ற கொமண்டோ

யாழ் பாணம், பெப். 2

மட்டக்களப்பு அம்பலாந்துறை பகுதியில் புலிகள் இருவரை சுற்றிவளைக்க முற்பட்ட கொமாண்டோக்கள்மீது நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது

எனினும் விடுதலைப் புலிகள் இருவரும் கொமாண்டோக்களின் தாக்குதலில் இருந்து தப்பிச் சென்றனர் (இ-10)

### ஷுல்ட்ஸுக்கு புலி மீது வந்த மோகம்

லண்டன், பெப்.1

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்சின் இடது பின்புறப்பகுதியில் (buttock) 'புலி' படம் பச்சை குத்தப் பட்டுள்ளது

லண்டன் சஞ்சிகை 'ஸ்பெக்டேட்டர்' முதன்முதலாக இச் செய்தியை வெளியிட்டது

பின்னர் அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ் வீக்', நாளிதளான 'வாஷிங்டன்போஸ்ட்' ஆகியன இச் செய்தியை வெளியிட்டன

இதைத் தொடர்ந்து அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திடம் இச் செய்தி பற்றி விசாரிக்கப்பட்டது.

செய்தி சரியா, பிழையா என்று சொல்லாமல் ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் மௌனம் சாதித்தனர்.

பிரபல வர்த்தகர் ஒருவரே இதுபற்றி தகவல் தந்தார் என்று லண்டன் சஞ்சிகை கூறியுள்ளது. (இ-எ)

### இயக்கத்திற் சேருவோருக்கு

## எமது முதற் பரிசு சயனைட் குப்பிதான்

### கிட்டு கூறுகிறார்.

யாழ்ப்பாணம், பெப். 2

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்பவர்களுக்கு நாம் கொடுக்கும் முதல் பரிசு "சயனைட் குப்பி"தான் அதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களுக்கு செய்யும் தியாகம் வீரமரணம். எமது போராளிகளில் இதுவரை 406 போராளிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

இவர்களில் அரைவாசிப் பேர் சயனைட் மாத்திரை விழுங்கியே இறந்தனர்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு தெரிவித்தார்.

சிறுவர்களின் மேம்பாடு கருதி ஆனைக்கோட்டை கல்வி வளர்ச்சிக்கழகத்தில் அமைக்கப்பட்ட "தியாக சீலம்" சிறுவர் பூங்காவை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விழாவுக்கு திரு. ச. நமசிவாயம் தலைமை வகித்தார்.

ஏராளமான பொதுமக்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் திரு. மயூரனும் இங்கு உரை நிகழ்த்தினர். (இ-10)

# அம்பாறை தொகுதியை

## விலக்கிய கிழக்கு மாகாண யோசனைக்கு புலிகள் எதிர்ப்பு

சென்னை பெப்.1

அம்பாறைத் தொகுதியை விலக்கிய கிழக்கு மாகாண யோசனையை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை

புலிகள் இயக்கவட்டாரங்கள் இப்படித் தெரிவித்தன என்று 'புரொண்ட் லைன்' தகவல் வெளியிட்டுள்ளது

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய தொகுதிகள் உள்ளன. அம்பாறை மாவட்டம் 1,752 சதுர மைல்களைக் கொண்டது.

இந்த விஸ்தீரணத்தில் அரைப்பங்குக்கு மேல் அம்பாறைத் தேர்தல் தொகுதிக்குள்வருகிறது. மிகுதிதான் மற்ற மூன்று தொகுதிகளையும் சேரு (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ் சிறு விளம்பரங்கள்**

**வகுப்புகள்**

க.பொ.த உயர் (89) கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம் 09 - 02 - 1987 மொடேன் எடியுகேசன் சென்ரர், சரவெட்டி.

**காணவில்லை**

அருட் சகோதரர் அந்தோனிப்பிள்ளை மனுவேற்பிள்ளை தோமஸ் அதிபர், புனித ஜோன் பொஸ்கோ மகா வித்தியாலயம், அட்டன் அவர்களுடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இளவாலை புனித கென்றீஸ் கல்லூரியில் அல்லது யாழ் ஆயர் இல்லத்தில் ஒப்படைக்கவும்.

**வாடகைக்கு**

தொலைபேசி வசதியுடன் கூடிய 3 அறை வீடு உடன் வாடகைக்கு உண்டு: 34, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.


உடைமைகள், உறவுகளை இழந்து நிற்கும்

# கிழக்கு அகதிகளுக்கு பரிவுடன் உதவுங்கள்

## மட்டு - திருமலை ஆயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப். 2

உடைமைகள், உறவுகளை இழந்து வடபகுதிக்கு வந்துள்ள கிழக்கு மாகாண அகதிகள் அங்கே சென்று மீளக் குடியேற முடியாத நிலையில் உள்ளனர்.

வடபகுதி மக்கள் அவர்களை அரவணைத்து பரிவுடன் பாதுகாக்கவேண்டும்.

இவ்வாறு யாழ் வந்துள்ள மட்டக்களப்பு - திருமலை மறை மாவட்ட ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை கேட்டுக்கொண்டார்.

யாழ் வந்த ஆயரை எமது செய்தியாளர் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

வடபகுதி மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைப் போல் ஆயிரம் மடங்கு துன்பங்களை கிழக்கு மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது

இங்கே இராணுவம் வெளியேறாத வரையில் மக்கள் ஓரளவு நிம்மதியுடன் உள்ளனர்.

அங்கே அப்படியல்ல. இராணுவம், சிங்கள மக்கள், ஊர்காவல் படைபோன்ற முத்தரப்புத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது

இதனால் ஒருலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக வெளியேறி உள்ளனர்.

அவர்கள் மீளச்சென்று குடியேற முடியாத நிலையில் உள்ளனர்.

அரசின் நிவாரண உதவிகள் மறுக்கப்பட்டு நிர்ப்பந்தத்தால் மீளக் குடியேறியவர்கள் அனுபவிக்கும் துயரங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.

புல்லுமலை, தெஹியத்தையில் மீளக்குடியேறிய 120 தமிழ்க் குடும்பங்களில் ஆறு குடும்பத்தினர் வெட்டிக் கொலைசெய்து பூண்டோடு அழிக்கப்பட்டனர்.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து இராணுவ உயர் அதிகாரிகள் தமது சிப்பாய்களைத் தம்மால் கட்டுப்படுத்த முடியாது உள்ளது எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே அரசின் நிவாரண உதவிகள் மறுக்கப்பட்டுள்ள - வடபகுதிவந்துள்ள - கிழக்கின் அகதிகளை வடபகுதி மக்கள் பரிவுடன் பராமரிக்க வேண்டும்.

-இவ்வாறு ஆயர் கேட்டுக்கொண்டார். (ஈ-5)

அரசியல் தஞ்சம் தொடர்பான

# சுவிஸ் அரசின் சட்டம் அநீதியானது

## அந்நாட்டுப் பேராசிரியர் கருத்து

ஜெனிவா, பெப். 1

சுவிஸ் நாட்டில் உள்ள அரசியல் தஞ்சம் வழங்கும் சட்டம், அநீதியின் சாதனமாகத்தான் செயல்படுகிறது.

பேர்ன் பல்கலைக் கழகத்தின் தத்துவப் பேராசிரியர் திரு. பீட்டர் ஈச்சர் முன்கண்டவாறு தெரிவித்தார்

ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இலங்கைத் தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு பேராசிரியர் ஈச்சர் தனது வீட்டில் தங்க இடமளித்துள்ளார்.

இதற்காக வசதி நிறைந்த விடு ஒன்றுக்கு பேரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ★ வடமராட்சிக் கல்விக்கோட்ட அலுவலகம்

உடுப்பிட்டி, பெப். 2

வடமராட்சிக் கல்விக் கோட்ட அலுவலகம் இன்று 2 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வீ. கே. ஈஸ்வரபாதம் தலைமையில் நடைபெறும் இவ்வலுவலகத் திறப்பு விழா வைபவத்தில் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக அலுவலகத்தைத்திறந்து வைப்பார்

வடமராட்சிக் கல்விக் கோட்டக் கல்வியதிகாரியாக திரு வீ. தங்கராசா நியமிக்கப் படுவார்.

பருத்தித்துறை, உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரிகள் இவருக்கு உதவியாகப் பணியாற்றுவார்கள். (இ-157)


**ஓராண்டு நினைவஞ்சலி**

அமரர் மயிலு கந்தையா

அச்செழு. நீர்வேலி.



ஆண்டவன் படைப்பு: 20-05-1927

ஆண்டவன் பறிப்பு: 15-01-1986

திதி: பூரபட்ச பஞ்சமி 2-2-87

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே உங்களைப் பிரிந்து ஓராண்டு ஆகியும் உங்கள் சிரிப்பும் இருமலும் என்று அடங்கியதோ அன்று முதல் எங்கள் சிரிப்பும் அடங்கிவிட்டதையா! உங்கள் அரவணைப்பில் நாங்கள் இருந்த காலங்களை எண்ணிக் கண்ணீர் சிந்துகிறோம் ஐயா!

உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு என்றென்றும் நீங்காதையா! உங்கள் நினைவுகள் நீங்கும் நாள்; எமது உயிர் எம்முடலை விட்டுப் பிரியும் நாள் ஆகும். உங்கள் ஆத்ம சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை இடைவிடாது பிரார்த்தனை செய்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.


தமிழீழ நீதிமன்ற பிரதிநிதிகள் மத்தியில் கிட்டு:

# இரு தரப்பும் ஏற்கும் வண்ணம் தீர்ப்பு இருக்க வேண்டும்

## இல்லையேல் ஒவ்வொரு தீர்ப்பும் பல எதிரிகளைச் சம்பாதித்து விடும்

சுன்னாகம், பெப். 2

நீங்கள் நீதி வழங்கினால் மாத்திரம் போதாது. நீதியை நீங்கள் வழங்கியுள்ளதாக வழக்கில் சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் மனதார ஏற்கும் வண்ணம் அவர்களுக்கு உணர்த்துவது மிக முக்கியமானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் கிட்டு இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் வின்ஸர் திரையரங்கில் வடபிரதேச தமிழீழ நீதிமன்றங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து திரு. கிட்டு உரையாடினார்.

திரு. கிட்டு மேலும் குறிப்பிட்டதாவது;-

'மக்களின் பிரச்சினைகளைக் குறைப்பதற்காக அல்லது இல்லாதொழிப்பதற்காகவே தமிழீழ கிராமிய நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

ஆகவே, இந்த நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்பு நியாயமாக வழங்கப்பட்டுள்ளது என்ற உணர்வு மக்களிடையே ஏற்படத்தக்கதாக நீங்கள் நடந்து கொள்வது அவசியம்.

இல்லையேல் ஒவ்வொரு தீர்ப்பும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எதிரிகளை தமிழீழ கிராம நீதிமன்றத்துக்கு ஏற்படுத்திவிடும்.'

இப்படி அவர் கூறினார்.

விரைவில் நியமிக்கப் படவுள்ள ஆட்பில் நீதிமன்றம் பற்றியும் கலந்துரையாடல் நடைபெற்றது. (இ-27)

# வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தனியார் ஆஸ்பத்திரி பதிவுக் கட்டணம் உயரும்

கொழும்பு, பெப். 2

தனியார் ஆஸ்பத்திரிகளுக்கான பதிவுக்கட்டணமும் வருடாந்த லைசென்ஸ் கட்டணமும் அதிகரிக்கப் படவுள்ளன.

இதற்கான சட்டத்திருத்தம் விரைவில் கொண்டுவரப் படவுள்ளது.

பதிவுக்கட்டணம் நூறு ரூபாவில் இருந்து பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

வருடாந்த லைசென்ஸ் கட்டணம் 50 ரூபாவில் இருந்து 2,000 ரூபாவாக அதிகரிக்கப்படும்

நாட்டில் 500 க்கு மேல் தனியார் ஆஸ்பத்திரிகள் உள்ளன (உ-ஈ)

## லொறி சாரதி, கிளீனர்கள் ஆனையிறவில் பட்டினி

யாழ்ப்பாணம், பெப். 2

ஆனையிறவில் சிப்பாய்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ள லொறிகளின் சாரதி, கிளீனர்கள் பட்டினி நிலையில் உள்ளனர்

இவ்வாறு யாழ் வந்த மட்டக்களப்பு— திருமலை ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்

சுமார் இருநூறு வாகனங்கள் அப்பக்கமோ இப்பக்கமோ போகமுடியாது சிக்கியுள்ளன.

ஆயரைக் கண்ட சாரதிகள் தமது நிலையை யாழ் பத்திரிகைகளுக்கு எடுத்துக் கூறும்படி கேட்டுக்கொண்டனர்

ஐந்து, ஆறு நாட்களாக அங்கேயே தவம் கிடக்கும் அவர்கள், ரயில்வே பாதையில் சமையல் செய்து சாப்பிடுகின்றார்கள்.

பலர் பட்டினி கிடக்கிறார்கள்.

இவ்வாறு ஆயர் தெரிவித்தார். (உ-5)

## கிளிநொச்சி உதவி அரசஅதிபர்

சாவகச்சேரி, பெப் 2

சாவகச்சேரி உதவி அரசாங்கஅதிபர் திரு. கே துரைராசா கிளிநொச்சி தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபராகப் பதவி ஏற்றுள்ளார்.

# கிழக்குப் படுகொலைகளை சர்வதேசரீதியில் அம்பலமாக்குவது அனைவரினதும் கடமை

## மறுமலர்ச்சிக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப் 2

அரசால் கிழக்கில் நடத்தப்படும் படுகொலைச் சம்பவங்களைச் சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்துவது நம் அனைவரதும் கடமை ஆகும்.

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

அரசு சர்வதேச ரீதியில் தனக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயரை போக்கிக்கொள்ள இனப் பிரச்சினையை தீர்க்க முயற்சிப்பதாக கூறிக் கொள்கிறது.

ஒருபுறம் தனது போலி முகத்திரையுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றது. மறுபுறம் பொருள் தடை, பொருளாதாரத்தடை, மக்களை மதரீதியாக இராணுவரீதியில் கொன்றொழித்தல் போன்ற ஒடுக்கு முறைகளை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுத் தனது சுயரூபத்தை வெளிக்காட்டுகிறது.

எப்படியாவது சர்வதேசரீதியில் பெரிதும் அம்பலப்படாத விதத்தில் எமது போராட்டத்தை அழித்து விடுவது என்பதே இன்றைய இனவாத அரசின் அடிப்படைத் திட்டம் ஆகும்.

எதிரியின் கொடூரம் சர்வதேசரீதியில் வெளிப்படுத்தப்படுவதற்கு நாம் எம்மண்ணில் இப்படுகொலைகளை எதிர்த்துக் குரல் கொடுப்பதும், போராடுவதும் அவசியம் ஆகும்.

இந்த வகையில் அன் [illegible] படுகொலைகளுக்கு [illegible] டித்து அணிதிரமான [illegible] திகளில் வெளிப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாதது.

இப் படுகொலைகள் எமது மக்களின் மனோ பயத்தை சிதைத்துவிடும் என்பது எதிரியின் திட்டமாயின் எதிரி இங்கே தோல்வியையே தழுவுவான்.

இழப்புகளில் இருந்து உயிர் பெற்றெழும் எமது தாயகம், எமது மக்களின் முழுமையான விடுதலைக்கு வழிகோலட்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

## இடமாற்றம்

அச்சுவேலி, பெப். 2

யாழ் அபிவிருத்திச் சபை அச்சுவேலி உப அலுவலகத்தில் மின்சாரப்பகுதி அதிபராகக் கடமையாற்றிய திரு. [illegible] உப அலுவலகமின்சாரப் பகுதி அதிபராக இடமாற்றப்பட்டார்.

கடல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட

# 2 உயர்தர மாணவர்கள் கடலில் மூழ்கி மரணம்

## முல்லைத்தீவில் பரிதாபம்

முள்ளியவளை, பெப். 2

கடற்சிப்பி, கடற்பாறை சம்பந்தமான ஆராய்ச்சியில் ஆசிரியருடன் ஈடுபட்டுக்கொண்டு இருந்த இரண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் கடலில் மூழ்கி மரணமானார்கள்

முல்லைத்தீவு, செம்மலைக்கடலில் மூழ்கிய இந்த இரண்டு மாணவர்களும் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் ஜி.சி.ஈ உயர்தர வகுப்பில் விஞ்ஞானப்பிரிவில் படித்து வந்தவர்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு:-

க சுவேந்திரன் (வயது-18), ச கிருபாரூபன் (வயது 18).

புதன்கிழமை நடந்த இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;-

விஞ்ஞான வகுப்பு மாணவர்கள் விஞ்ஞான வகுப்பு ஆசிரியருடன் செம்மலைக் கடற்கரைக்குச் சென்றனர்.

அங்கு கடற்பாறையின் சில பகுதிகளை மாணவர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

அச்சமயம் பெரிய அலை ஒன்று வந்து மாணவர்கள் மேல் மோதியது. இதில் எட்டு மாணவர்கள் அள்ளுண்டு கடலுக்குள் இழுக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட இரண்டு மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர் காப்பாற்றப்பட்டனர்

உயிரிழந்த மாணவரில் ஒருவரான சுவேந்திரன் நீச்சல் தெரிந்தவர்.

இவர் இரண்டு பேரைக் காப்பாற்றி பாறைக்கு மேல் கொண்டு வந்து சேர்த்த சமயம் இன்னொரு பெரிய அலையினால் அவரே அடித்துச் செல்லப்பட்டார் (உ-எ-93)


ஆண்களின் தேவைகளை நிறைவேற்றுகிறது

**ரிஷி அஜமாமிச லேகியம்**

"முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது"

**அதன் பயன்கள்**

இல்வாழ்க்கையில் சிறந்த இன்பம் பெறவும் இழந்த சக்தியை மீட்டுக் கொடுப்பதுடன், எல்லா நரம்புகளையும் முறுக்கேற்றி வீரியவிருத்தியை கொடுக்க வல்லது தளர்ச்சி, சோர்வு, களைப்பு. சிறுபிராயத்தில் அறியாமல் செய்த கெட்ட செய்கையாலும், வாலிப பருவத்தில் மிதமிஞ்சிய தாம்பத்தியத்தாலும், வயதான காலத்தில் உடல் சக்தியையும், ஆண் தன்மையையும், இரத்தம் குறைந்து மனச்சோர்வடைந்துஇருப்பவர்களையும் ரிஷி அஜமாமிச லேகியம் சாப்பிடுவதினால் புது சக்தியைப் பெறும்.



இல்லற வாழ்க்கையில் சந்தோஷமாக இருப்பதற்கு சிறந்த காயகல்ப மருந்து. சக்தியையும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருகிறது.

250 கிராம்: ரூ 60/- 500 கிராம்; ரூ 110/-

தபால் செலவு ரூபா 10/-

Dr.T.D.மதுரநாயகம், D. A. M. (Cey.) M. Ac F. (Cey)

**ஞானசுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.



**யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை**

# கேள்வி அறிவித்தல்—1987

**சந்தைகள், கடைகள், இறைச்சிக் கடைகள் முதலியன.**

16 12 86ந் திகதியில் என்னும் விளம்பரம் செய்யப்பட்ட கேள்வி விளம்பரத்தின் பிரகாரம் கிடைக்கப் பெற்று, நிராகரிக்கப்பட்ட கேள்விகளுக்கும், சில புதிய கேள்விகளுக்கும் மீண்டும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விகள் பற்றிய விபரமும், நிபந்தனைகளும், கேள்விப் பத்திரங்களும் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் அவ்வவ் உப அலுவலகங்களில் 10.02.1987ந் திகதி, நண்பகல் 12 00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம், கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதி யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்திலும், இணைப் பிரதி உப அலுவலகத்திலும், 11 02 87ந் திகதி நண்பகல் 12·00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வை. மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1987.01. 28

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 01. ஊர்காவற்றுறை | 1 சந்தை மேல்மாடிக் கடைகள் ஒவ்வொன்றும் | 12,500 00 |
| | 2 சந்தை மாட்டிறைச்சிக் கடை இல 1, 2 | 6,500.00 |
| 02. சுன்னாகம் | 1. சுன்னாகம் சந்தை மேல்மாடிக் கடைகள் | 70,000 00 |
| 03. உரும்பராய்-ஊரெழு | 1 ஊரெழுப்பகுதி மாட்டிறைச்சிக் கடை | 4,000.00 |
| 04. நாரந்தனை | 1. புளியங்கூடல் சந்தைக் கடைகள் 3 ஒவ்வொன்றும் | 20,000.00 |
| 05. மானிப்பாய் கிராமம் | 1. காக்கைதீவு சயிக்கிள் காலை | 750.00 |
| | 2. தொட்டிலடிச் சந்தை | 750 00 |
| | 3 தாவடிசுட்டு ஆட்டிறைச்சிக்கடை ஆண்டுக் குத்தகை | 3,000.00 |
| | 4. சாவல்கட்டு கருவாட்டுக்கடை ஆண்டுக் குத்தகை | 500 00 |
| 06. வேலணை | 1. துறையூர் மீன்சந்தை | 2,200 00 |
| | 2. வேலணை மாட்டிறைச்சிக் கடை | 2,500 00 |
| 07. புலோலி | 1, மந்திகைச் சந்தைக்கடை 3 ஒவ்வொன்றும் | 22,000.00 |
| 08. பண்டத்தரிப்பு பட்டணம் | 1. பண்டத்தரிப்புச் சந்தை | 1,25,000 00 |
| 09. காங்கேசன்துறை | 1 சந்தைக் கடைகள் 2 ஒவ்வொன்றும் | 2.000 00 |
| 10. கிளிநொச்சி | 1. கிளிநொச்சிச் சந்தை | 1,00,000.00 |
| | 2. மாட்டிறைச்சிக்கடை இல 1 | |
| | 3. மாட்டிறைச்சிக்கடை இல 2 | |
| | 4. மாட்டிறைச்சிக்கடை பரந்தன் | |
| | 5. ஆட்டிறைச்சிக் கடை கிளிநொச்சி இல 1 | |
| | 6 ஆட்டிறைச்சிக் கடை கிளிநொச்சி இல 2 | |
| | 7. ஆட்டிறைச்சிக் கடை பரந்தன் சந்தை | 4,000 00 |
| 11 தெல்லிப்பளை | 1 தெல்லிப்பளை ஆட்டிறைச்சிக் கடை | 4,000 00 |
| 12. கோப்பாய் | 1. இருபாலை ஆட்டிறைச்சிக் கடை | 5 500 00 |
| 13. நல்லூர் | 1 திருநெல்வேலி சந்தைக்கடை இல 16 | 20,000 00 |
| 14 சுழிபுரம் | 1. சுழிபுரம் புதியகடை இல 1 | 65,000 00 |
| | 2. சுழிபுரம் புதியகடை இல 2 | 45,000 00 |
| 15. நீர்வேலி | 1. ஆட்டிறைச்சிக் கடை | 1,000 00 |
| | 2. மாட்டிறைச்சிக் கடை | 2,500.00 |
| 16 வரணி | 1. வரணி மாட்டிறைச்சிக் கடை | 2,000 00 |
| 17. பூநகரி | 1. பூநகரி ஆட்டிறைச்சிக் கடை | 2,500.00 |
| 18, கரைச்சி | 1 உருத்திரபுரம் டி 10 மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 |
| | 2 இரணைமடுச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1,100 00 |
| 19. கைதடி | 1. சந்தைக் கடைகள் ஒவ்வொன்றும் | 40,000 00 |
| 20, சாவகச்சேரி | 1. மாட்டிறைச்சிக்கடை | 2,500 00 |
| 21. நயினாதீவு / புங்குடுதீவு | 1. கோவில் இறங்கு துறைக்கும், குறிகாட்டுவான் இறங்குதுறைக்கும் இடையிலான பயணப் படகுச் சேவைகள். | |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

சிறப்பான குணத்தையும் காரியங்களையும் நீ மறந்து விடாதே!

— ஔவை

உதயன்
உண்மை - நிர்ப்பயம் - நடுநிலைமை
இல.15, கஸ்தூரியார் வீதிக்கு அருகில்: தொலைபேசி: 24805, 22073
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் 02-02-1987 த.பெ.23

## பட்டினிச் சாவுப் பயங்கரம்!

கிழக்கில் பட்டினிச் சாவு ஏற்படும் அபாயம் உருவாகி இருப்பதாக எச்சரிக்கப்பட்டிருக்கிறது. அந்த முன்னெச்சரிக்கை அதிகாரிகள் மட்டத்திலிருந்தோ அல்லது மதிப்பீடு நடத்தியவர்களிடம் இருந்தோ வரவில்லை.

திருகோணமலை — மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளையிடம் இருந்து வந்திருக்கிறது. அவரின் முன்னெச்சரிக்கையைக் கவனத்தில் கொண்டு பேராபத்தைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளிலும் உடனடியாக ஈடுபட வேண்டியது தமிழர் நலனில் அக்கறை உள்ள எல்லோரதும் தலையாய கடமையாகும்.

எத்தியோப்பியாவில் பட்டினிச்சாவு ஏற்பட்டது கண்டு ஏங்கினோம். எத்தனை லட்சம் மனித உயிர்கள் பசி தீர்க்க முடியாமல் பட்டினிச்சாவு காணப்போகின்றனவோ என்று அஞ்சினோம். ஆனால் உலக நாடுகள் உதவிக் கரம் வழங்கி அங்கு பட்டினிச் சாவுகளைத் தடுத்தன; குறைத்தன.

எத்தியோப்பிய நிலைமை எங்கள் மக்களுக்கு ஏற்படும் அபாயம் தோன்றியிருப்பது கேட்டு நெஞ்சம் துணுக்குறுகிறது. அந்தப் பயங்கரத்தை நினைத்துப் பார்க்கவும் மனம் ஒப்புதில்லை!

எத்தியோப்பியாவில் வானம் பொய்த்ததால் - இயற்கையின் கோபத்தால் அந்நாட்டு மக்கள் பட்டினிச் சாவைக் கண்டார்கள். ஆனால் இலங்கையில் ஈழத்தமிழர்களோ மனிதனின் அரக்கத்தனத்தால், கொடுமையால், ஆவேசத்தால் சாவை எதிர்நோக்குகிறார்கள்.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் குடும்பத் தலைவர்களும், குடும்ப உழைப்பாளிகளுமாகச் சுமார் நாலாயிரம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். தொற்று நோயால் அவர்கள் செத்தார்களா? வெள்ளத்தால், புயலால், வரட்சியால் மரணமானார்களா? இல்லை.

அரசாங்கப் படைகளின் துப்பாக்கிக்கும், ஷெல்லுக்கும் அவர்கள் இரையானார்கள். அரசாங்கமே அவர்களைக் கொன்றது.

உலகில் எந்த நாட்டு அரசாங்கம் இப்படி மக்களைக் கொன்று குவித்திருக்கிறது? நாலாயிரம் குடும்பத்தலைவர்கள், உழைப்பாளிகள் இறந்து போனதால் அவர்களின் உழைப்பை நம்பி இருந்த சுமார் இருபதினாயிரம் மக்கள் நிர்க்கதிக்கு ஆளாகி இருக்கிறார்கள். தமது ஜீவனோபாயத்தை நாளாந்தம் எப்படி நடத்துவது என்பது தெரியாமல், உழைப்புக்கு வழியின்றி, உணவுக்குக் கதியின்றி அல்லற்படுகிறார்கள்.

கொக்கட்டிச்சோலையில் மூன்று நாட்களில் 200 பேரை நரபலி எடுத்த அரசு, நான்கு வருடங்களில் நாலாயிரம் பேரின் உயிரைக் குடித்ததில் என்ன வியப்பு!

நாலாயிரம் பேரைக் கொன்றதன் மூலம் இருபதாயிரம் பேரை பட்டினி போட்டு மறைமுகமாகச் சாகடிக்க அது கணக்குப் போட்டதோ யார் அறிவார்?

வடபகுதி மீது பொருளாதாரத் தடை விதித்து அவர்களை மறைமுகமாகச் சாகடிக்க முனையும் அரசாங்கம், கிழக்கில் அதனை ஏற்கனவே செய்துவிட்டது.

இந்த விவகாரத்தை அம்பலத்துக்குக் கொண்டு வர வேண்டும். மனித உரிமை இயக்கங்கள், உயிர்பேல் சருணை காட்டும் மதங்களுடன் சார்ந்த நிறுவனங்கள் யாவும் இந்த அட்டூழியம் குறித்து தகுந்த ஆதாரங்களுடன் வெளி உலகத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

கிழக்கு மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுமாறு வெளிநாடுகளில் உள்ள தொண்டர் ஸ்தாபனங்கள், அரசாங்கங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இலங்கை அரசு வெட்ட வெளிச்சமாகவும், மறைமுகமாகவும் நடத்தும் மனிதக் கொலைகளை நிறுத்த நிர்ப்பந்திக்குமாறு உலக நாடுகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

அதே வேளையில் குடும்பத் தலைவர்களை இழந்த மக்களுக்கு உடனடியாக உதவுவதற்கு சமூகநல ஸ்தாபனங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் மதஸ்தாபனங்களும் திட்டங்களை வகுத்து அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுப்பது அவசியம்.

தமிழனைச் சாகடித்தாலும் அவன் தனது சுதந்திரத்தை, உரிமைகளை விட்டுக்கொடுக்க ஒரு கட்டத்திலும் தயாராக மாட்டான் என்பதை உறுதியோடு அரசுக்கு எடுத்துச் சொல்ல அதுவே மார்க்கமாகும்.

## ராமராவ் சினிமாவில் நடிப்பதை எதிர்த்து ரிட்!

ஹைதராபாத், பெப் 1

திரைப்படங்களில் நடிப்பதற்கு ஆந்திர முதல் அமைச்சர் என்.ரி.ராமராவுக்கு தடை உத்தரவு விதிக்கும்படி சமர்ப்பிக்கப்பட்ட ரிட் மனுவை ஆந்திர மாநில மேல் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

'பிரம்மரிஷி விசுவாமித்ரா' படத்தில் திரு ராமராவ் நடிக்க இருக்கிறார்.

முதலமைச்சர் தற்சமயம் அரச ஊழியர். ஆகவே அவர் படங்களில் நடிக்க முடியாது. முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிய பின்னர் அவர் படங்களில் நடிக்கலாம்— இப்படி ரிட் மனுவை தாக்கல் செய்த குண்டூர் வழக்கறிஞர் வி ஹரிநாதபாபு கூறியிருக்கிறார். (ஒ-எ)

**வெளி உலகில்**

## தென் ஆபிரிக்காவில் மே மாதம் தேர்தல்

கேப்டவுண், பெப் 1

தென் ஆபிரிக்காவில் சிறுபான்மை ஆளும் இனத்தவரான வெள்ளையர்களுக்கான பொதுத் தேர்தல் மே மாதம் நடைபெறும்.

இதனை நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி போத்தா அறிவித்தார்.

கறுப்பு இன மக்களின் அரசியல் ரீதியிலான வன்செயல்கள் 1987 ஆம் ஆண்டில் பெருமளவில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வெள்ளையர்கள் எதிர்நோக்கும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

நாடாளுமன்றத்தில் வெள்ளை இனத்தவர் சபையில் 178 ஆசனங்களில் 127 ஆசனங்களை போத்தாவின் ஆளும் தேசியக்கட்சி தற்பொழுது கொண்டுள்ளது. (ஒ)

## அபிப்பிராய வாக்கெடுப்பு

அடிஸ்அபாபா, பெப் 1

எதியோப்பியாவில் புதிய ஜனநாயக ஆட்சி ஆரம்பமாவதற்காக இன்று மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடக்கின்றது.

இதன்மூலம் அரசியல் யாப்பு திருத்தம் செய்யப்பட்டு, ஜனாதிபதி, உப ஜனாதிபதி ஆகியோரை மக்கள் நேரடியாகவே வாக்குச்சீட்டு மூலம் தெரிவுசெய்ய முடியும்.

இவ்வாறு எதியோப்பிய தற்காலிக இராணுவ அரசாங்கத் தலைவர் ஜெனரல் ஹைலிமரியம் தெரிவித்தார். (ஒ)

அக்கினோவுக்குப் பலப்பரீட்சை?

# பிலிப்பீன்ஸில் இன்று சர்வஜன வாக்கெடுப்பு

மணிலா, பெப்-2

பிலிப்பீன்ஸில் புதிய அரசியல் சட்ட அமைப்பிற்கு ஆதரவு பெறும் வகையில் இன்று திங்கட்கிழமை சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறுகின்றது.

இதில் 2கோடி 50 லட்சம் வாக்காளர் தமது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்வார்கள்.

ஜனாதிபதி அக்கினோவின் அரசாங்கத்தில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை அறியும் முக்கிய பலப்பரீட்சையாக இந்த வாக்கெடுப்பு கணிக்கப்படுகின்றது.

மக்களின் ஆதரவை பெற முடிந்தால் 1992 ஆம் ஆண்டுவரை அக்கினோ பதவியிலிருக்க முடியும். (ஒ)

## தீய சக்திகளை அகற்ற உத்தரவு

மணிலா, பெப். 1

தவறான வழியில் செல்லும் சக்திகளை முப்படைகளிலும் இருந்து அகற்றி விடுமாறு உயர் ராணுவ அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அறிவித்தலை பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி அக்கினோ தமது ராணுவ அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

தாம் எவரையும் கொல்ல விரும்பவும் இல்லை அதே சமயம் எவராலும் கொல்லப் படுவதையும் விரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

5ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய

## இந்துச் சின்னங்கள் பஹ்ரைனில் மீட்பு

பஹ்ரைன், பெப். 1

சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இந்து சமய சின்னங்கள் வரையப்பட்ட ஜாடி ஒன்று அரபு நாடான பஹ்ரைனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதைபொருளாராய்ச்சியாளர்கள் புதைகுழி ஒன்றைத் தோண்டிச் சென்ற சமயமே இந்த அரிய பொருளைக் கண்டு பிடித்தனர்.

அந்த ஜாடியில் திக்கோழி போன்ற கறுப்பு நிற பறவை ஒன்று வரையப்பட்டிருந்தது. அதை விட இந்து சமய சின்னங்களும் வரையப்பட்டிருந்தன.

இந்திய உபகண்டத்துடன் உள்ள தொடர்பை நிருபிப்பதாக இது அமைந்துள்ளது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

பழங்கால தில்முன் (DILMUN) நாகரிகத்தில் உறைவிடமாக பஹ்ரைன் இருந்ததற்கான சான்றாக இது உள்ளது— இப்படி பஹ்ரைன் அரசு அதிகாரி ஜனாப் அனிஸ் சுவிலா தெரிவித்தார். (ஒ - எ)

## மதுத்தடை விசாரணை

சென்னை, பெப் 1

சாராயக்கடைகளை ஜனவரி முதலாம் திகதி முதல் மூடும்படி தமிழ்நாடு அரசு விடுத்த கட்டளைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. (ஒ-எ)

**செய்திச் சாரம்**

**கண்காணிப்பு**

ஹாவாய் தீவில் முன்னாள் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி மார்கோஸின் நடமாட்டத்தை கடுமையாக அமெரிக்க அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள்.

**தணிக்கை**

தென் ஆபிரிக்காவில் பத்திரிகைத் தணிக்கையை தீவிரமாக அமுல்படுத்த பொலீஸாருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன

**அகற்றப்பட்டார்**

விண்வெளியில் முதல் முதலாகச் சென்ற பெண்மணியான வலன்டீனா ரெரஸ்கோலா கடந்த 20 வருட காலமாக வகித்து வந்த ரஷ்ய பெண்கள் நலன்குழுத் தலைவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளார். (ஒ)

**பெருவெள்ளம்**

பிரேஸில் நாட்டில் பெரு வெள்ளம் காரணமாக சுமார் பத்தாயிரம் மக்கள் வீடிழந்தனர். 75 க்கும் அதிகமானோர் பலியானார்கள்.

**மேலும் தடை**

தென் ஆபிரிக்காமீது மேலும் கடுமையான பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டுமென ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போ தெரிவித்தார்.

**செய்திக்கொத்து**

## தமிழ் வர்த்தகர் கொழும்பில் கைது

கொழும்பு, பெப் 2

கொழும்பில் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

கோட்டைப் பகுதியில் இரும்புக்கடை ஒன்றை இவர் நடத்தி வந்தார். இவரின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் உள்ளது.

கோட்டையில் பழைய பொலீஸ்நிலையக் கட்டடத்தில் குண்டு தயாரிக்கும் சாதனங்கள் அடங்கிய பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டது சம்பந்தமாகவே இந்தவர்த்தகர் கைதானதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## போராளியின் சடலம் அடக்கம்

வல்வெட்டித்துறை, பெப். 2

பருத்தித்துறையில் ஆய்வு ஒன்றை நடத்திய போது வீர மரணம் அடைந்த புலிகள் போராளி மா. குணசிங்கம் (பவுன்) என்பவரின் பூதவுடல் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் மண்டான் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (உ-எ-160)

## தமிழ்மொழி பாட ஆசிரியர் ஆலோசகர்கள்

அச்சுவேலி, பெப். 2

தமிழ்மொழி பாடத்திற்கான ஆசிரியர் ஆலோசகர்களை தெரிவு செய்வதற்காக யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம் சம்பந்தப்பட்ட பாடத்துறை ஆசிரியர்களிடம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கல்வி வலய அடிப்படையில் தமிழ்மொழி பாடத்திற்கு ஆசிரியர் ஆலோசகர் பதவிக்கென விண்ணப்பங்கள் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் அதற்கான

மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது (இ-11)

## புதிய வகுப்பு அனுமதி

உடுப்பிட்டி, பெப். 2

கரணவாய் மகா வித்தியாலயத்தில் 12 ஆம் வகுப்பு (ஆண்டு 13) வரை நடத்துவதற்கு கல்வித் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

இந்த அனுமதியை அடுத்து இவ்வாண்டு 11 ஆம் வகுப்பு (ஆண்டு 12) இவ்வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ:157)

## லயன் கழக கருத்தரங்கு

கொழும்பு, பெப் 2

இலங்கை லயன் கழகம் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவிருக்கிறது.

இக்கருத்தரங்கு அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது.

லயன் கழகத்தின் தலைவர்கள், முன்னாள் தலைவர்கள், ஆளுநர்கள், முன்னாள் ஆளுநர்கள் கருத்தரங்கில் பங்கு பற்றவேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர்.

(இ-எ)

## எச்சரிக்கை

உடுப்பிட்டி, பெப். 2

வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோதமாக கள் அருந்துவோர், விற்பனை செய்வோர் ஆகியோர் மீது தமிழீழக் கிராம நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கூட்டுறவு புனருத்தாரண சபை இப்பகுதியிலுள்ள தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் சார்பில் வெளியிட்டுள்ள ... எச்சரிக்கை ... விப்பை அடுத்து வடமராட்சிப்பகுதியில் வீடு ...

கக் கள் விற்பனை செய்வது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதோடு தவறணைகளில் கள் விற்பனையும் அதிகரித்துள்ளது. (உ-157)

## கட்டுரைப் போட்டி

அச்சுவேலி, பெப். 2

அகில இலங்கை லயன்ஸ் சமூகம் நாடளாவிய ரீதியில் கட்டுரைப் போட்டி ஒன்றை மாணவர் மத்தியில் நடத்துகின்றது

'போதைப் பொருள் பாவனையைத் தடுத்தல்' என்ற விடயத்தை உள்ளடக்கியதாக இக்கட்டுரை வரையப்படவேண்டும்.

தமிழ், சிங்கள மொழியில் நடத்தப்படும் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் ரொக்கப் பணமும் பரிசாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது (உ-11)

## சனசமூக நிலையங்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப் 2

யாழ் மாநகர சபை எல்லைக்குள் உள்ள சனசமூக நிலையங்கள் தமது வருடாந்த பொதுக் கூட்டங்களை கூட்டி புதிய நிர்வாகிகள் தெரிவுப் பட்டியலை பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன் சமாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

யாழ் மாவட்ட சனசமூக நிலைய சமாசச் செயலாளர் திரு இ தவகோபால் இவ்வாறு தெரிவித்தார். (இ-5)

## கருத்தரங்கு

சாவகச்சேரி, பெப் 2

சர்வதேச சமாதான சேவை இயக்க வட பிராந்தியக் கிளை பெப்ரவரி 4 ஆம் திகதி "சுகாதாரமும் வாழ்வும்" என்னும் விடயம் பற்றி கருத்தரங்கு ஒன்றை நடத்தவிருக்கிறது

அறவழிப் பணிமனையில் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் இ... தொழில் ... ளர் திரு. எம். பொன்னம்பலம் தொடக்கி வைப்பார். (உ-31)



**பொய்யாமொழி**

குறள்

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

பொருள்

ஒருவன் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றாலும் ஊழிற்கு ஏற்றவாறு அவனுக்கு உள்ளதாகும் அறிவே மேற்பட்டுத் தோன்றும்.

# 5 ஆம் தர மாணவருக்கு புலமைப் பரிசில் பரீட்சை இவ்வருடம் நடக்குமா?

அம்பாறை, பெப். 2

இந்த வருடம் ஐந்தாம் வகுப்பு (ஆண்டு - 6) மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்படுமா? எனப் பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தற்பொழுது பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பில் (ஆண்டு -6) கல்வி பயிலும் மாணவர்கள் புதிய கல்வித் திட்டத்தின்படி, புதிய பாடத்திட்டத்தைக் கற்று வருகின்றனர்.

இதனால் வழக்கமாக நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சை இந்த வருடம் நடத்தப்படுமா என சந்தேகம் எழுப்பப்படுகின்றது

இதேவேளை இந்த ஆண்டு முதல் நான்காம் வகுப்பு (ஆண்டு-5) முடிவிலேயே போட்டி பரீட்சைமூலம் மாணவர்கள் ஆரம்ப நிலைப் பாடசாலைகளில் இருந்து இடைநிலைப் பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படும் புதிய முறை செயற்படத் தொடங்கியுள்ளது.

எனவே இதன் பின்னர் ஐந்தாம் வகுப்பில் (ஆறும் ஆண்டில்) புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றால் அதில் சித்தியடைபவர்கள் மற்றொரு முறை பாடசாலைகளை மாறும் வாய்ப்பும்—

இதனால் பாடசாலை அனுமதி தொடர்பாக நிர்வாகச் சிக்கல் ஏற்படும் நிலையும் உருவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது (உ-14)

**சமய சந்நிதிகளில்**

## குருநகரில் புதுமை மாதா திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ் குருநகர் புதுமை மாதா ஆலய திருநாள் கொண்டாட்டங்கள் இன்று திங்கட்கிழமை நடைபெறுகின்றன.

காலையில் பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம்பெறும்.

மாலையில் மாதாவின் திருச்சுரூப தேர்ப்பவனி நடைபெறும்.

இன்றைய இக்கட்டான நிலைமையில் மக்களை, திருவிழாவை எளிமையாக கொண்டாடும்படியும், தமிழ் மக்களின் சுபீட்சத்திற்கும், அமைதிக்கும் பிரார்த்திக்குமாறும் பங்குத் தந்தை கேட்டுள்ளார். (இ-5)

## காணிக்கை மாதா கோயில் திருவிழா

வல்வை, பெப். 2

சக்கோட்டை காணிக்கை மாதா கோவில் திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறுகின்றது.

இத்திருநாள் இக்கோவிலின் ஆரம்பத் திருநாளாக கொண்டாடப்படுகிறது. (இ-160)

## குறிஞ்சிக் குமரன் அலங்கார விழா

பேராதனை, பெப். 2

பேராதனைப் பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு குறிஞ்சிக் குமரனின் அலங்கார மகோற்சவங்கள் நாளை 3 ஆம்திகதி செவ்வாய்க்கிழமைஆரம்பமாகின்றன.

தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ள அலங்கார உற்சவங்கள் 12 ஆம் திகதி தைப்பூச விழாவுடன் பூர்த்தியாகும். (ஒ)

## புங்குடுதீவு விநாயகர் கொடி

யாழ்ப்பாணம், பெப். 2

புங்குடுதீவு மேற்கு இருபிட்டி அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைசெவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

11-ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். (ஒ)

## பூதநாத சுவாமி உற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 2

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ பூதநாத சுவாமி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 11 தினங்கள் நடைபெறும். (ஒ)

## பாடசாலையைவிட்டு விலகிய மாணவருக்கு ஆங்கிலபாட வகுப்பு

யாழ்ப்பாணம், பெப் 2

பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்களுக்கான ஆங்கிலபாட வகுப்புகளை அவர்கள் கல்வி கற்ற பாடசாலைகளிலேயே நடத்த திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு சி.எஸ் சுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

சனி, ஞாயிறு விடுமுறைத்தினங்களில் நடத்தப்படும்.

கல்விகற்க விரும்பும், பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்கள் தத்தமது (விலகிய) பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொள்ளலாம்.

அதிபர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வார்கள்.

ஒருவருடம் நடை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொதேண் இன்ஸ்ரிரியூட்
கண்டுக்குளி.
O/L காலைப் பிரிவு
ஆண்டு 10, 2ஆம் பிரிவு
ஆரம்பம்: 6-2-87
பாடக் குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

# உதயன்

02 - 02 - 1987 திங்கட்கிழமை

நொதேண் இன்ஸ்ரிரியூட்
கண்டுக்குளி.
A/L 87 / 88
தமிழ் - திரு. குழந்தை
செவ்வாய் 3.00 மணி
அரசியல் - திரு. ம.:.றூப்
சனி, ஞாயிறு 9.00 மணி
ஆரம்பமாகிறது.

## வித்தாரம்

என்ன முரளித் தம்பி, எங்கே வெள்ளெனக் காலம்பிற உங்காலைப்பக்கம் இருந்து வாறீர்? என்ன விசேஷம்;

அட அதுக்காகவே போய்விட்டு வாறுய்; ஒ எங்கடை பகுதியிலை, எங்கடை ஆக்கள் தயாரிச்ச விமானத்தைப் பாக்கிறதுக்கு ஆருக்குத் தான் ஆசை இராது!

நீ சொன்னமாதிரி நேற்றைக்கு ரவுண் முழுக்க ஒரே வதந்தியும் பரபரப்பும் தான். பெடியன்கள் எங்கையோ ஒரு வெளியிலை விமானத்தை ஓடிப் பாக்கினம் எண்டும், அதிலை இருந்து கொண்டு ஏதேதோ எல்லாம் செய்யப் போகினம் எண்டும் ஒரே கதை.

எங்கடை தொழிலுக்கு வதந்தி எண்டு எதைத் தான் ஒதுக்கிவிட முடியும்? விஷயம் உண்மை தானே எண்டு அங்கும் இங்கும் ஓடித் திரிஞ்சு அலைஞ்சு பார்த்தேன்.

ஒண்டும் கொத்தயில்லை, வந்திட்டேன். பின்னேரம் சைக்கிளிலை வந்து கொண்டிருக்கையிக்கை ஒருவர் அடுத்தவரைப் பாத்து 'ஹெலி பாக்கப் போவோம் வாறியே?' என்டு கேட்டுக்கொண்டிருந்தார். அப்ப இரவிலை 'ரயலர்'க்கும் எண்டு நினைச்சேன். நீ சொல்லுறதைப் பாத்தா இரவிலையும் நடக்கயில்லை. நீ மூளைகாரன்தான் காலையிலை வைச்சாலும் வைக்கலாம் எண்டு நினைச்சிட்டாய். இண்டைக்குக் காலையிலையும் அப்ப நடக்கயில்லை. நேரகாலம் சொல்லி உதுகளை நடத்திறதாலையும் பெரிய 'றிஸ்க்'குகள் இருக்கு.

எங்கடை சனத்துக்கு என்ன, புதினம் பாக்கிறதும், வித்தாரம் பேசிறதும் தானே அதுகளுக்குக் கை வந்த கலை.

* * *

எப்பிடி, இரண்டு மூண்டு நாட்களிலை 200 தமிழரை அரசாங்கம் கிழக்கிலை கொன்று குவிச்சுப் போட்டுது. ஆனால் அரசாங்கத் தரப்பிலை இரண்டு பேர் செத்தது - சரி "குளுவ் பயரிலை" செத்தது எண்டாவது சொல்லிச்சினமே, இல்லை!

அமெரிக்கக் கம்பனி நடத்தின இறால் பண்ணையிலை வேலை செய்த தமிழ் தொழிலாளர் 23 பேரை கொலை செய்ததையும் மறைக்கப் பாக்கினம். அதைப் போராளியளின்ரை பண்ணை எண்டு சொல்லுகினம் ஆனால் அமெரிக்கரான மனேச்சர் மறுத்திருக்கிறார்.

அவராவது தன்ரை நாடு குடுக்கிற ஆயுதத்தாலை அப்பாவியளை இவையள் கொல்லுகினம் எண்டு உலகத்துக்கு எடுத்துச் சொல்லக்கூடாதே ... !

கிழக்கிலை போராளிகளை அடக்கி விட்டதாக அச்சாணியார் வீரம் பேசியிருக்கிறார் அது மட்டுமே முந்திப் பல தடவை போட்ட றெக்கோட்டை திரும்பவும் போட்டிருக்கிறார். கிழக்கு முடிஞ்சுது அடுத்தது வடக்கு எண்டு முழங்கி இருக்கிறார்.

முந்தி ஒருக்கா தெஹிவளையிலை போராளியள் தாக்கியபோது குழந்தையளைக் கொல்லுறது தான் முதலாம் நம்பர் இனப்படுகொலை என்று வர்ணிச்சவர் இப்ப கொக்கட்டிச்சோலையிலை தமிழ்க் குழந்தைகளை எல்லாம் கொண்டதை என்னெண்டு சொல்லுவாரோ...?

உதுகளையும் செய்விச்சுக்கொண்டு சமாதானக் கூட்டங்கள், ஒற்றுமைக் கூட்டங்களிலையும் போய்ப் பேசிறார்.

வெள்ளவத்தை ராமக்கிருஷ்ண மிஷன் மண்டபத்திலை போனகிழமை நடந்த கூட்டத்திலை, போர் என்றால் இரண்டு தரப்பாலும் வெல்ல முடியாது எண்டும் சமாதானமாகவே பிரச்சினையைத் தீர்க்க வேணும் எண்டும் சொன்னார் இப்ப கிழக்கு முடிஞ்சுது இனி வடக்கு எண்டு போர்க்கோலம் பூணுறார். உவர் என்ன பிறப்போ தெரியவில்லை.

ஆனால் கிழக்கிலங்கையிலை இருந்து கொழும்பிலை மந்திரிப் பதவி வகிக்கிற பிரகிருதியளும் மனிசப்பிறப்புகள் தானே. எண்டு எனக்கு ஒரு ஐமிச்சம்.

கொக்கட்டிச்சோலை தமிழர் பிரேதச்சாலையாக மாறி இருக்கிறது. ஏதாவது இரண்டு வார்த்தையாவது அவையின்ரை வாயாலை வந்துதே பாரேன்! பிறந்து வரயிக்கை மந்திரிப் பதவியையும் கொண்டு வந்த மாதிரி அதை கட்டிப்பிடிச்சுக்கொண்டு இருக்கினம்... இந்த அரசாங்கத்திலை எத்தனை ரகமான மனுஷார்கள் அப்பா... சீச்சீ...!

கிண்டேடி

## நாவலர் ஐந்தாம் குரவர் அல்லர்

## முதல் குரவரே

### மலர் வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், பெப். 2

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐந்தாம் குரவர் அல்லர். அவரை முதற் குரவர் என்றே நாம் கூறுவோம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றத்தின் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

திருநெல்வேலி கலா மன்றத்தில் நேற்றுநடைபெற்ற 'நாவலர்' குரல் என்ற பெயருடைய நாவலர் குரு பூசை மலர் வெளியீட்டு விழாவில் தலைமை உரை நிகழ்த்தினார்.

கலாநிதி சிற்றம்பலம் தொடர்ந்து கூறியதாவது

தெற்கே அநாகரிக தர்மபால சிங்கள பௌத்த மதவளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு வித்திட்டார்.

அதேபோலவே நாவலர் பெருமானும் சைவமும், தமிழும் வளர வேண்டுமென இங்கே வித்திட்டார்.

ஆனாலும் நாவலர் செய்த பணியை எமது சமுதாயம் இன்னும் உணரவில்லை.

நாவலர் ஐந்தாம்குரவரா? அவருக்கு சிலை வைக்கலாமா? இவ்வாறு பலர் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

அவர்களுக்கு நாம் கூறுவோம்.

நாவலர் ஐந்தாம் குரவர் அல்லர். முதற் குரவரே. நாவலரின் பணி மகாத்தானது 64நாயன்மார்கள் செய்யாத பணியை நாவலர் செய்துள்ளார்.

நாவலர் ஒரு அரசியல்வாதி அல்லர் தனக்கு ஒருசிலை வைக்கவேண்டும் தமது நாமத்தை மக்கள் உச்சரிக்க வேண்டும் என அவர் நினைக்கவில்லை.

இப்படி அவர் சொன்னார்.

சிறப்புரை நிகழ்த்திய திருமதி மங்கையற்கரசி திரு சிற்றம்பலம் தெரிவித்ததாவது:-

19ஆம் நூற்றுண்டில் எமது சமுதாயத்துக்கு, எமது மொழிக்கு, கலை, கலாசாரத்துக்கு பெரும் தாக்கம் ஏற்பட்டது.

அந்தவேளையில் தான் ஒரு குரல் ஒலித்தது நல்வழிப்படுத்தும் குரலாக நாவலர் குரல் ஒலித்தது.

மக்களை நல்வழிப்படுத்துவதற்கு நாவலர் போன்றோர் இன்னும் தேவைப்படுகின்றனர். இப்படி அவர் தெரிவித்தார்.

பண்டிதர் மு. கந்தையா, திரு. சி. சிவமகராசா, கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், திரு ஆ. மகாலிங்கம் ஆகியோரும் விழாவில் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் திரு பொ. கனகசபாபதி நன்றியுரை வழங்கினர்.

(இ-10)

## லூர்த்து மாதா கோயில் உற்சவம்

உடுப்பிட்டி, பெப்-2

தும்பளை லூர்த்து மாதா கோயில் வருடாந்த உற்சவம் இன்று 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

11 ஆம் திகதி காலை நடைபெறும் கூட்டுத் திருப்பலிப் பூசையுடன் உற்சவம் முடிவடையும்.

(இ-157)

## இலங்கை...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசின் ஆக்கபூர்வமான பதிலை இரண்டு, மூன்று தினங்களில் பெற்றுத் தருவதாக அவர் கூறிச் சென்றார்.

அவர் எம்மை சந்தித்ததற்கு அடுத்தநாள் தொடக்கம் மூன்று தினங்களாக இலங்கையின் கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவைதான் இலங்கை அரசின் ஆக்கபூர்வமான பதிலாகக் கொள்ளப்பட வேண்டுமானல், அது இந்தியாவுக்கு பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளது

- இப்படி இணை அமைச்சர் ப. சிதம்பரம் சொன்னார். (அ-எ)

## பாடசாலை--

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் வகுப்புகளுக்கு மாதாந்தம் 12 ரூபா 50 சதம் கட்டணமாகமாணவர்களிடம் இருந்து அறவிடப்படும்.

வருடமுடிவில்பொதுப் பரீட்சை மூலம் மாணவர்களுக்கு கல்வி அமைச்சின் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார் (இ-5)

## சுவி----

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சிரியர் புதிதாகக் குடிபுகுந்துள்ளார்.

"நான் மறைக்க விரும்பவில்லை. அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்க விரும்புகிறேன்

இப்படி பேராசிரியர் சொன்னார்.

(உ-எ)

## எனது இடத்தில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளோம்

ஆயுதந் தரித்த ஒரு கோஷ்டி ஒரு பகுதியைப் பிடித்து வைத்துக் கொண்டால் அப்பகுதியில் எப்படி ஜனநாயகம் தழைக்க முடியும்; செழிக்க முடியும்?

ஆயுதந் தாங்கிய கோஷ்டிகள் சரண் அடைந்த உடனே பாதுகாப்புப்படையினர் அனைவரையும் நான் விலக்கிக் கொள்வேன்.

கேள்வி: வழமையான பயிற்சிக்கு மேலாக இலங்கைத் துருப்புக்களுக்குமேலதிகப் பயிற்சி கொடுக்கும்படி நீங்கள் இந்தியாவைக் கேட்டதாகச் செய்தி இச்செய்தியில் உண்மை உண்டா?

ஜே ஆர்: மேலதிக பயிற்சிக்கு துருப்புகளை இந்தியாவுக்கு அனுப்பத் தயார் என்று நான் இந்தியாவுக்கு சொன்னேன். ஆனல் இந்தியாவிடம் இருந்து பதிலே வரவில்லை:

கேள்வி;- ராஜீவ் காந்தி இப்போது என்ன செய்ய வேண்டும்?

ஜே. ஆர்.: இந்திய மத்திய அரசும் தமிழ் நாடு அரசும் தமிழ்த் தீவிரவாதிகள் குறித்து கடுமையாக இல்லை.

ராஜீவின் பேச்சுக்களில் இந்தியாவையும் பஞ்சாபையும் நீக்கிவிட்டு பார்த்தால் ஏனையவை இலங்கைக்கு முற்றும் பொருந்தும், இரண்டு அளவு கோல்கள் ஏன் வைத்து இருக்க வேண்டும்?

பெரும்பான்மை இந்தியர்கள் சீக்கியர்களுடன் வைத்து இருக்கும் உறவிலும் பார்க்க நாம் தமிழருடன் கூடிய இனேகிதமாக இருக்கிறேம்.

இந்திய தரப்பில் இருந்து எமக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே. இந்தியாவிடம் ஹெலிக்கொப்டர்களும் கப்பல்களும் உள்ளன, இப்போது ஏன் அவர்கள் எமக்கு உதவவில்லை.

ராஜீவுக்கும் அவரின் அரசுக்கும் எப்போது மனம் திரும்புமோ என்பதுஎனக்குத் தெரியாது.

ராஜீவை ஒன்று கேட்க விரும்புகிறேன் இன்னும் நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள்.

அதிஷ்டவசமாக நாடாளு மன்றத்தில் எனக்கு பெரியமொஜாரூட்டி உண்டு. அவர்களின் பொறுமையை நான் சோதிக்கிறேன்.

எனது தனிப்பட்ட பெருமையையும்செல்வாக்கும் தான் இவ்வளவு தூரம் இழுத்துச்செல்கிறது அரசியல் தடுமாற்றம் குறித்து நான்பயப்படவில்லை.

என் இடத்தில் வேறு ஒருவர் இருந்து இருப்பின் கதையே வேறாக இருந்திருக்கும்."

இப்படி திரு.ஜெயவர்த்தன சொன்னார்

(இ-எ)

## அம்பாறை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது

கிழக்கில் அம்பாறைத் தேர்தல் தொகுதி தான் மிக பெரிய தொகுதி

அம்பாறைத் தேர்தல் தொகுதியில் உள்ள காணிகள் தான் கல்ஓயா திட்டத்தின் 90 சதவீதமான பயனை அடைகின்றன.

இத்தொகுதியில் தான் செழிப்பான வயல் நிலங்கள் உள்ளன.

செழிப்பான நிலத்தை எம்மிடமிருந்து பறித்து எடுத்து விட்டு வரண்ட நிலத்தை தமிழ் பேசும் மக்களிடம் ஒப்படைப்பது தான் இலங்கையின் திட்டம்

இப்படி புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## தாக்குதல்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லங்காக நாட்டின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் படைகள் வட பகுதிக்கு நகர்த்தப்படும்.

எனினும் தெற்கில் அங்கும் இங்குமாக கலவரங்கள் ஏற்பட இடமளிக்காதபடி பார்த்துக் கொள்ளப்படும்.

இப்படி அதிகாரபூர்வமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஒப்சேவர்' செய்தி வெளியிட்டுள்ளது

கிழக்கு மாகாணத்தில் இருந்து தீவிரவாதிகளை ஒழிக்கும் தாக்குதல் முடிவடைந்து விட்டது என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார் என்றும் 'சண்டே ஒப்சேவர்' செய்தி வெளியிட்டுள்ளது. (இ-எ

## பி-பி-சி---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்பு நிலையம் விடுத்தது என்று பி.பி.சி வானொலி நேற்று இரவு அறிவித்தது.

கொழும்பில் உல்லாச ஹோட்டலில் தங்கியிருக்கும் வெளிநாட்டுச் செய்தியாளர், தீவிரவாதிகளின் பொய்த் தகவல்களைப் பெற்று இப்படியானசெய்திகளை அனுப்புகின்றார்களாக அறிக்கையில் மேலும் கூறப்பட்டது

200க்கும் அதிகமான தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று செய்தியை மடக்கப்பட்ட பிரசைகள் குழு மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளது என்று பி. பி சி வானொலி மேலும் (தெரிவித்தது. (இ-எ)

## ஈழத் தமிழ் அமைப்புகள்

## கருத்துவேறுபாடுகளை கைவிட வேண்டும்

### என்கிறார் இ.காங்கிரஸ் தலைவர்

நாகர்கோவில், பெப் 2

ஈழத்தமிழர் அமைப்புக்கள் கருத்துவேறுபாடுகளைத் கைவிட்டு ஒற்றுமையாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வரவேண்டும்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பழனியாண்டி முன் கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது:-

ஈழத் தமிழர்மீது இலங்கை அரசு பொருளாதார முற்றுகை விதித்துள்ளது. இது இனப்பிரச்சினை தீர்வுக்கு வழிவகுக்காது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண மத்திய அரசு உறுதியுடன் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இப்படி திரு. பழனியாண்டி தெரிவித்தார்,

(இ-எ)

## கொடி தின வாரம்

காங்கேசன்துறை, பெப்2

தெல்லிப்பழை சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த சுகாதார அபிவிருத்திச் சபையின் கொடி தின வாரம் இன்று திங்கட்கிழமை அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்படுகிறது. (இ-68)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. பொன்னம்பலம் நடராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திருமதி மகேஸ்வரி நடராசா



தோற்றம்;
06 - 06 - 1925
மறைவு:
22 - 07 - 1985



தோற்றம்: 11 - 11 - 1917
மறைவு: 12 - 02 - 1986
திதி: 02 . 02 . 1987

விண்ணுலகம் நீங்கள் சென்று
எவ்வாண்டு ஆனாலும்
மண்ணை விட்டு நாம் வரும்போதும்
மாறாது உங்கள் நினைவு!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'லலித வாசம்'
புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தவர்,
உறவினர்கள்.

## திருமண அழைப்பு

உ
சிவமயம்

மணமகன்: பாலசுப்பிரமணியம்

மணமகள்: குமுதினிதேவி

காலம்: 02 - 02 - 1987 திங்கட்கிழமை பகல் 12.48 மணி முதல் 2.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை விரும்பும்

வை. இரத்தினம் தம்பதிகள்
புளியங்கூடல்,
வேலணை.

சி. க. குமாரசாமி
(மங்கலம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.)
'ஸ்ரீ சாந்த பவனம்',
பாடசாலை வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

## நீத்தார் பட்டியல்

## அமரர் நாகலிங்கம் குணரத்தினம்

யாழ்ப்பாணம் - நவீன சந்தை லதா ரெக்ஸ், சுன்னுகம் - நவீன சந்தை உதயம்ஸ் ரெக்ஸ்ரயில்ஸ் ஆகியவற்றின் முன்னை நாள் உரிமையாளராகிய திரு. நா குணரத்தினம் காலமாகிவிட்டார். அன்னுர் நாகலிங்கம் - நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும், சுகிர்தராணியின் அன்புக் கணவரும், விஜயகுமார், புஸ்பலதா, மனோகரன், சுனிர்தா, உதயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று இன்று (2-2-87) காலை 10-00 மணிக்குத் தகனக் கிரியைக்காக ஏழாலை கிழக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

—தகவல்: மனைவி,
பிள்ளைகள்.

ஏழாலை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 02 - 02 - 1987
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ. 60 N 86. Telephone. 24805, 22078.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org